திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் சொல்ல விரும்புவது மிகவும் முக்கியமான விஷயம். திருச்சியில் சுமார் 20,000 பீடித் தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒத்தி வைப்புப் பிரேரணை கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு இரண்டு மானியங்களை எடுத்துக்கொண்டு அவையிலே விவாதிக்க இருக்கிறோம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : துணைத் தலைவரவர்களே, எல்லோருக்கும் வாய்ப்பு கொடுத்தீர்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் கேட்கிறார்கள் , என்று கேட்க வேண்டுமென்றால் நேரம் ஆகிவிடும். என்னுடன் உறுப்பினர்கள் ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

* * * * * * *

திரு ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கச்சத் தீவிலே நாம் கலந்து கொள்வதைத் தடுப்பதற்காக இலங்கை அரசு போட்டிருப்பதைப்பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம். மூன்று நாட்கள்தான் அங்கே திருவிழா. நேற்று விழா ஆரம்பித்திருக்கிறது, நாளை ஒரு நாள் தான் பாக்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு நாளைக்கு ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைத்தான் எடுக்கிறோம்.

* * * * * * *

இருக்கின்ற நேரத்திலே இவ்வளவுதான் செய்ய முடியும். இதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(3) கவன ஈர்ப்புகள்.

சேலம் கூட்டுறவு சக்கரை ஆலை ஒப்பந்தக்காரர்களிடம் கரும்பு எடுத்துக் கொள்வது

அடுத்து, 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு, திரு. ரா. பெரியசாமி,. திரு. ரா. பெரியசாமி இருக்கையில் இல்லை ; எனினும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையை பேரவைக்கு அளிக்கலாம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1982 மார்ச் 11] *[திரு. கா. காளிமுத்து]*

அறிக்கை.

மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 1981—82 பிரதம பட்டம் கரும்பு அரவை நடந்து கொண்டிருக்கிறது. சர்க்கரை ஆலைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட கரும்பே காய்ந்துபோகும் நிலையில் உள்ளது. இப்படி இருக்க நாமக்கல் தாலுக்கா செங்கம்பள்ளி கிராமத்தின் முன்னால் கிராம அதிகாரி திரு. வேலு கவுண்டர் ஒப்பந்தம் இல்லாத கரும்பை முறைகேடாக சட்டத்திற்கு புறம்பாக மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைமை அதிகாரி வெட்டி அறைத்தால் முறையாக ஒப்பந்தம் செய்த கரும்பு உற்பத்தியாளர்களிடம் பெரும் அவதி நிலை நிலவுவது குறித்து.

வேளாண்மைத்துறை: செங்கப்பள்ளியைச் சேர்ந்த திரு. வேலுசாமி அவர்களிடமிருந்த பதிவு செய்யப்படாத கரும்பு மோகனூர் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையால் பெறப்படவில்லை.

திரு. வேலுசாமி கவுண்டரின் தந்தை திரு. எஸ். எம். பழனியாண்டி கவுண்டர் (அங்கத்தினர் எண். 852) சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 1981—82 பருவ அரவைக்கு 6.77 ஏக்கர் கரும்பு பதிவு செய்திருந்தார். அவரிடம் பதிவு செய்யப்படாத 1.30 ஏக்கர் கரும்பும் இருந்தது. 1981—82 ஆம் பருவ அரவை 2—11—1981 ஆம் ஆண்டில் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் தொடங்கப்பட்டது. 29—10—1981 ஆம் ஆண்டில் திரு. எஸ். எம். பழனியாண்டி கவுண்டர் தன்னிடம் உள்ள 1.30 ஏக்கர் பதிவு இல்லாத கரும்பை ஆலையில் எடுத்துக்கொண்டு அதற்கு ஈடான பதிவு செய்யப்பட்ட 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத கரும்பை ஆலையின் பதிவிலிருந்து விடுவிக்குமாறு விண்ணப்பித்துக் கொண்டார். ஆலையின் 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாத அரவைக்கு முதிர்ச்சி அடைந்த கரும்பு பதிவு செய்யப்பட்ட அளவுக்கு மேற்கொண்டும் தேவையாக இருந்ததாலும், திரு. பழனியாண்டி கவுண்டரால் அளிக்கப்பட்ட பதிவு இல்லாத கரும்பின் தரம் நன்றாக இருந்ததாலும் அவருடைய விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட முடிவின்படி திரு. மு. பழனியாண்டி கவுண்டருக்கு ஆலையால் வெட்டு உத்திரவு வழங்கப்பட்டது. அச்சமயம் ஆலையின் பிற அங்கத்தினர்கள் திரு. பழனியாண்டி கவுண்டர் அவர்களின் பதிவு இல்லாத கரும்பை ஆலை ஒப்புக் கொண்டதைப் போல தங்களிடம் உள்ள பதிவு இல்லாத கரும்பையும் ஆலை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். இப்புதிய சூழ்நிலை ஆலையினரால் பரிசீலிக்கப்பட்டு திரு. பழனியாண்டி கவுண்டர் அவர்களிடம் இருந்து பதிவு இல்லாத கரும்பை ஆலை எடுத்துக் கொள்வதை நிறுத்திக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. அதன்பேரில் அவருக்கு அளிக்கப்பட்ட

வெட்டு உத்திரவு நிறுத்தப்பட்டது. இதற்கு இடையில் திரு பழனியாண்டி கவுண்டர் அளிப்பதாக இருந்த 1.30 ஏக்கர் பரப்பளவில் இருந்த பதிவில்லாத கரும்பிலிருந்து சுமார் 0.70 ஏக்கர் அளவு கரும்புமட்டுமே எடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் மேற்கொண்டு கரும்பு அவரிடம் இருந்து பெறப்படவில்லை. மேலும் அவரிடம் மீதமிருந்த கரும்பை அவருடைய விருப்பம் போல் உபயோகிக்கலாம் என்றும் ஆலையால் தெரிவிக்கப்பட்டது.

ஆலையின் தினசரி திறனுக்கு வேண்டிய முதிர்ச்சியான கரும்பு கிடைக்காத மாதங்களில், சர்க்கரை ஆலைகள் ஆலையின் அங்கத்தினர்கள் அல்லது அங்கத்தினர்கள் அல்லாதவர்களிடம் இருக்கும் பதிவு இல்லாத கரும்பையினை தேவையான அளவிற்கு ஆலைகளை இலாபகரமாக இயக்கும் நோக்கத்தோடு எடுப்பது வழக்கம். எனினும், ஒரு அங்கத்தினரிடமிருந்து பதிவு செய்யாத கரும்பை ஆலையார் ஏற்றுக்கொண்டால், பிற அங்கத்தினர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களின் பேரில் அவர்களிடமுள்ள அனைத்து பதிவு செய்யாத கரும்பினை ஆலை அரைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதைக் கருத்தில்கொண்டு, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை திரு. பழனியாண்டி கவுண்டர் அவர்களிடமிருந்து பெறுவதாக இருந்த பதிவில்லாத சுமார் 46 சதவீத கரும்பை எடுப்பதை நிறுத்திவிட்டது.

(ஆ) தமிழ்நாட்டில் பல பகுதிகளில் காலரா நோய் பரவியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், இ. முத்துராமலிங்கம், எஸ். என். இராமசாமி, ஆர். நவநீதகிருஷ்ணன் பாண்டியன், ப. நெடுமாறன், க. பரமலை, உ. சுப்பிரமணியன், செ. சிவசாமி, தி. கா. நல்லப்பன், ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம், எஸ். சிவராமன், பெ. சு. திருவேங்கடம், ப. பொன்னுரங்கம், கு. பா. பழனியப்பன், கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து, இரா. தாமரைக்கனி, ஏ. தங்கராசு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவனஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்; அமைச்சர் அறிக்கைக்குப் பிறகு ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் ஒவ்வொருவருக்குக் கேள்வி கேட்க அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) நேரத்தை ஒட்டித்தான், இந்த ஏற்பாடு.

திரு. இரா. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, '' தமிழ்நாட்டில் பல பகுதிகளில் காலரா நோய் பரவியுள்ளது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.